கூடுதல் மாவட்ட நீதிமன்றம். விருதுநகர்

அ.வ.எண். 67-2021

வாதி தரப்பு 1வது சாட்சி பழனிசாமி என்பவரின் வாக்குமு:லம் (1869ம் ஆண்டு சாட்சியசட்டம் 44வது பிரிவு 6வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி.எம்.சுமதி, மொழிபெயர்ப்பாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | |
|---|---|
| பெயர் : பழனிசாமி | சாதி : |
| தகப்பனார்-கணவர்: சுப்புராஜ் | சமயம் :இந்து |
| கிராமம் : விருதுநகர் | தொழில் : டிரைவர் |
| தாலுகா : விருதுநகர் | வயது : 53 |

நாள்: 18.10.2022.

வா.சா.1

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் 1ம்வாதி. எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. 18.04.2021 தேதியிட்ட கடன் உறுதி சீட்டு வா**.**சா**.**ஆ**.1,** பிரதிவாதி வீட்டை கிரையம் செய்ததற்கான வில்லங்க சான்றிதழ் இணையவழி நகல் வா**.**சா**.**ஆ**.2** (பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யபடுகிறது), வாதி ஆதார் அட்டை புகைப்பட நகல் வா**.**சா**.**ஆ**.3,** பிரதிவாதிகளின் ஆதார் அட்டை நகல் வா**.**சா**.**ஆ**.4** (பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யபடுகிறது).

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)